நீரோடித்துறையிலிருந்து கிட்டத்தட்ட 45 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். மேற்குக் கடற்கரையான அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 16 மீனவக் கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கரையோரப் பகுதிகளில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து வளாகங்களில், P.W.D.–க்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அதை ஆய்வு செய்து, வரக்கூடிய காலங்களில் நீங்கள் அந்த மீன் பதனிடும் பூங்காவை அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கண்ணுக்குத் தெரிந்த சில இடங்களிலே பொதுப் பணித் துறை மற்றும் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் இருப்பதாகச் சொல்கின்றார். அதை பூதக் கண்ணாடி கொண்டு ஆராய்ந்து பார்த்து, உண்மையிலேயே நிலம் இருந்தால், நிச்சயமாக அங்கே மீன் பதனிடும் பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதைத் தவிர ஒரு யோசனை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சேர்ந்து partnership அடிப்படையிலேகூட செய்யலாம். நிச்சயமாக அரசு அதற்கு உறுதுணையாக இருக்கும்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 186, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

186—

கலைக் கல்லூரிக்கு கட்டடம்

***4375—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சுரண்டை–ஆனைகுளம் பகுதியிலுள்ள கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2017 ஜூலை 12]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சுரண்டை—ஆனைகுளம் பகுதியிலுள்ள காமராசர் அரசு கலைக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர், அண்ணன் அவர்களையும் வணங்கி, தென்காசி தொகுதிக்குட்பட்ட, சுரண்டையில் அமைந்திருக்கக்கூடிய அரசு கலைக் கல்லூரியானது சிவகுருநாதபுரம், இந்து நாடார் கமிட்டியின் சார்பாக 26 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டு, துவங்கப்பட்டது. அந்தக் கல்லூரியில் கிட்டத்தட்ட 10 இளநிலை பட்டயப் படிப்புகளும், 6 முதுகலை பட்டயப் படிப்புகளும், ஆக, 16 விதமான பட்டயப் படிப்புகள் உள்ளன. அங்கு நம்முடைய அரசால் ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் மொத்தம் 81. அதில் நிரந்தரமான விரிவுரையாளர்கள் கிட்டத்தட்ட 39 பேர் இருக்கிறார்கள். என்னுடைய கோரிக்கையை ஏற்று, சுமார் 3 மாதங்களுக்கு முன்பாக 15 விரிவுரையாளர் பணியிடங்களை வழங்கியதற்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோக அந்தக் கல்லூரியானது 2 shifts ஆக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்றால், அந்தக் கல்லூரி துவங்கிய காலத்திலிருந்து அங்கு 15 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. ஏன் இதைக் குறிப்பாகச் சொல்கிறேனென்றால், 30—6—2016 அன்று அங்கு படிக்கக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை 742 ஆண்கள் மற்றும் 1,320 பெண்கள். அதுபோக, அரசு 20 சதவிகித மாணவர்களை additional ஆகச் சேர்த்துக்கொள்ளலாம் என்று உத்தரவிட்டதன்பேரில்,

கிட்டத்தட்ட 2,500 மாணவ மாணவிகள் பயின்று வருகிறார்கள். ஆனால் வெறும் 15 வகுப்பறைகள் மட்டுமே உள்ளன. மொத்தம் ஒரு வகுப்பிற்கு ஓர் அறை என்று பார்த்தால்கூட, அதாவது இளநிலை பட்டயப் படிப்புக்கு 30 வகுப்பறைகளும், முதுகலை பட்டயப் படிப்புக்கு 42 வகுப்பறைகளும் தேவைப்படுகின்றன. ஆனால், இருப்பதோ 15 வகுப்பறைகள் மட்டும்தான். அதனால்தான் இரண்டு பிரிவாக வகுப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன. இரண்டு shift ஆக நடப்பதை, ஒரே shift ஆக நடத்துமாறும், அதற்குத் தகுந்த உட்கட்டமைப்பு வசதிகளை, அதாவது lab வசதியாக இருந்தாலும் சரி, வகுப்பறை வசதிகளாக இருந்தாலும் சரி, library வசதியாக இருந்தாலும் சரி, அனைத்தும் செய்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, சுரண்டை காமராசர் அரசுக் கலைக் கல்லூரியானது, ஆரம்பிக்கின்றபொழுது 3 பாடப் பிரிவுகளுடன் மட்டும்தான் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட அந்தக் கல்லூரியிலே இப்போது 10 இளங்கலை மற்றும் 6 முதுகலை பாடப் பிரிவுகள் நடத்தப்பெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அங்கே தேவைக்குத் தகுந்தாற்போல் வகுப்பறைகள் இல்லை எனக் குறிப்பிட்டார்கள். கடந்த 2012 ஆம் கல்வி ஆண்டிலே இக்கல்லூரிக்கு 4 பாடப் பிரிவுகளும், அதனைக் கற்பிக்க 20 ஆசிரியர் பணியிடங்களும், 2013 ஆம் கல்வி ஆண்டிலே புதியதாக 9 பாடப் பிரிவுகளும், அதனைக் கற்பிக்க 40 ஆசிரியர் பணியிடங்களும் என, மொத்தம் 13 பாடப் பிரிவுகளையும், 60 ஆசிரியர் பணியிடங்களையும் உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், 2017–2018 ஆம் கல்வி ஆண்டிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியானது தொடர்ந்து தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், அண்ணன் எடப்பாடியார் அவர்கள்

2017 ஜூலை 12]

இந்தக் கல்வியாண்டிலே 15 ஆசிரியர் பணியிடங்களையும், அதற்குண்டான ஊதியத்தையும் வழங்கியதாகக் கோடிட்டுக் காட்டினார்கள். அந்த 15 ஆசிரியர் பணியிடங்களையும், இப்பணியிடங்களுக்கு சம்பளச் செலவினமாக 86 இலட்சத்து 16 ஆயிரத்து 240 ரூபாயையும் ஒதுக்கி ஆணை வெளியிடப்பட்டது. அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையிலே வழங்கப்பட்டது என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். மேலும், அங்கு மாணவர்களுடைய சேர்க்கையை அதிகரிக்க புதிய பாடப் பிரிவுகள் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலே, 2016–2017 ஆம் கல்வியாண்டிலே இக்கல்லூரியிலே கூடுதலாக M.Sc. *(இயற்பியல்) ஒரு பாடப் பிரிவும்,* 3 M.Phil *பாடப் பிரிவுகளும்,* 3 Ph.D. *பாடப் பிரிவுகளும் புதியதாகத் தொடங்குவதற்குண்டான கருத்துருவானது இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. கூடிய விரைவில் அந்த உத்தரவையும் அரசு வழங்கவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

முற்பகல் 10–45

அதோடுமட்டுமல்லாமல், 2012–2013 ஆம் கல்வியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கென்று ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இந்தக் கல்லூரிக்காக அந்தக் காலகட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.1,44,75,989/– என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறேன். இக்கல்லூரிக்குக் கூடுதலாக பாடப் பிரிவுகள் ஒதுக்கப்பட்டதால், மாணவர்களுடைய சேர்க்கை அதிகமானது. எனவே, தற்போது மாணவர்களுக்குக் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு அவையிலே கேட்டதோடு மட்டுமல்லாமல், கூடுதல் வகுப்பறைகள் வேண்டுமென்று ஏற்கெனவே நேரடியாக கடிதமும் கொடுத்துள்ளார். அதனடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை நிரூபிக்கின்ற வகையிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 19–6–2017 அன்று விதி 110–ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பிலே கூடுதல் வகுப்பறைகள்,

ஆய்வகங்கள், நூலகங்கள் போன்றவை ரூ.210 கோடி மதிப்பில் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்கீழ் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட சுரண்டை காமராசர் அரசு கலைக் கல்லூரியும் அடங்கும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துக்கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தொடரும் இந்த அரசானது நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டவுடனேயே இல்லை என்று சொல்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உட்கட்டமைப்பை மேம்படுத்தும்விதமாக கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்று கூறியதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், அந்தக் கல்லூரியில் படிக்கக்கூடிய மொத்த மாணவ, மாணவியர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அந்தக் கல்லூரி ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் இருக்கிறது. அந்தக் கல்லூரி மொத்தம் 27 ஏக்கர் பரப்பளவில் இருக்கிறபடியால், அனைத்திற்கும் சுற்றுச்சுவர் அமைக்க இயலாது. கல்லூரியில் குறிப்பிட்ட கட்டடங்கள் இருக்கக்கூடிய, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேட்ட முதல் கேள்விக்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரிவாகப் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள். இன்று நேரமில்லை அல்லவா?*

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *அந்தக் கல்லூரிக்கு சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுப்பதற்கும் சேர்த்து நிதி வழங்கவேண்டுமென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய*

2017 ஜூலை 12]

கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

187—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***3365—திரு. அ. ராமு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி வட்ட மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, நவீன வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோத்தகிரி அரசு வட்ட மருத்துவமனையைத் தரம் உயர்த்தி நவீன வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோருகிறார். அந்த மருத்துவமனை ஏற்கெனவே வட்டத் தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகையினால், வட்ட மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்துகின்ற கொள்கை முடிவு ஏதும் அரசிடம் இல்லை. அந்த மருத்துவமனைக்கு வேண்டிய வசதிகள் படிப்படியாகச் செய்து கொடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமு அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*